02-12-2013 Dinathanthi



பிரேசில் நாட்டில் இருந்து சென்னை துறைமுகத்துக்கு 8 மெட்ரோ ரெயில் பெட்டிகள் சில நாட்களுக்கு முன்பு வந்தன. அந்த ரெயில் பெட்டிகள் நேற்று அதிகாலை பெரிய லாரிகளில் சென்னை கோயம்பேடு மெட்ரோ ரெயில் நிலைய பணிமனைக்கு கொண்டு வரப்பட்டது. அவற்றை படத்தில் காணலாம்.



மெட்ரோ ரெயில் பெட்டிகள் தண்டவாளத்தில் இறக்கி வைக்கப்பட்ட போது எடுத்த படம்.

### பிரேசில் நாட்டிலிருந்து சென்னை துறைமுகத்திற்கு

# கப்பலில் வந்த மெட்ரோ ரெயில் பெட்டிகள் கோயம்பேட்டுக்கு கொண்டு செல்லப்பட்டன

## கருவிகள் சரியாக உள்ளனவா? என்ற சோதனை தொடக்கம்

சென்னை, டிச.1-

பிரேசில் நாட்டில் இருந்து சென்னை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்ட 8 பெட்டிகள் கொண்ட 2 மெட்ரோ ரெயில்கள், டிரக்குகளில் ஏற்றப்பட்டு கோயம்பேட்டுக்கு நேற்று கொண்டு செல்லப்பட்டன. இவற்றை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பரிசோதனை செய்து வருகின்றனர்.

### புதிய 2 மெட்ரோ ரெயில்கள்

சென்னையில் மெட்ரோ ரெயில் திட்டம், ரூ.14 ஆயிரத்து 600 கோடி செலவில், 2 வழித்தடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் மொத்தம் 42 மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட உள்ளன.

இதற்காக பிரேசில் நாட்டில் உள்ள "அல்ஸ்டாம்" நிறுவனத்திடம் ரூ.1,471.39 கோடி மதிப்பில் 4 பெட்டிகள் கொண்ட 42 ரெயில்கள் தயாரிக்க ஒப்பந்தம் போடப்பட்டது. இதில் 9 ரெயில்கள் பிரேசில் நாட்டில் உள்ள லாபா என்ற இடத்தில் உள்ள அல்ஸ்டாம் ரெயில் பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன. மீதம் உள்ள 32 ரெயில்கள் ஆந்திர மாநிலம் தடா அடுத்த ஸ்ரீ சிட்டியில் தயாரிக்கப்படுகின்றன.

### 8 டிரக்குகளில்

பிரேசில் நாட்டில் இருந்து முதல் கட்டமாக கடந்த மார்ச் மாதம் 4 பெட்டிகள் கொண்ட முதல் ரெயில் கப்பல் மூலம் சென்னைக்கு அனுப்பப்பட்டு சோதனை ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளது.

இரண்டாவது கட்டமாக ரூ.64 கோடி மதிப்பிலான 4 பெட்டிகள் கொண்ட 2 ரெயில்கள் பிரேசில் இருந்து கடந்த மாதம் 26-ந்தேதி கப்பல் மூலம் சென்னை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டு, 8 டிரக்குகளில் கோயம்பேட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளன.

### கோயம்பேடு வருகை

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது-

பிரேசில் நாட்டில் இருந்து சென்னைக்கு கொண்டுவரப்பட்ட மெட்ரோ ரெயில்கள் கப்பலில் இருந்து டிரக்குகளில் இறக்கப்பட்டு, துறைமுகத்தில் முறையாக சுங்கவரி சோதனை, மற்றும் ஊழியர்களுக்கான மருத்துவ சான்றுகள் அளித்த உடன், அவை டிரக்குகளில் ஏற்றப்பட்டு, போக்குவரத்து நெரிசல் இல்லாத அதிகாலை நேரத்தில் துறைமுகத்திலிருந்து கோயம்பேட்டுக்கு கொண்டு செல்லப்பட்டன.

மேலும் ரெயில் பாதையின் அருகில் அமைக்கப்பட்ட புதிய ரெயில் பாதைகளில் டிரக்குகளில் கொண்டுவரப்பட்ட ரெயில் பெட்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக இறக்கி வைக்கப்பட்டு உள்ளன.

### சக்தி வாய்ந்த சோதனை

மூடி சீல் வைக்கப்பட்ட தார்பாய்கள் அப்புறப்படுத்தப்பட்டு, அதில் உள்ள கருவிகள் சரியாக உள்ளனவா? என்று சோதனை நடத்தப்பட்டன.

மேலும் ரெயில் பெட்டிகள் இயக்கப்படும் போது அதன் கருவிகள் முறையாக இயங்குகிறதா? என்ற சோதனையும் நடத்தப்பட உள்ளது. இந்த சோதனைகள் ஓரிரு நாட்கள் நடைபெற உள்ளன. இவை முடிந்த உடன் சோதனை ஓட்டப்பாதையில் இந்த இரண்டு ரெயில்களும் இயக்கிப் பார்க்கப்பட உள்ளன.

இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.